


శ్రియై నమః.

శ్రీమతే హయగ్రీవాయ నమః

---

శ్రీమచ్ఛఠకోపయతిరాజనిగమాంతదేశికేభ్యో నమః

ఆళ్వారెంబెరుమానార్ దేశికర్ తిరువడిహళే శరణం.

శ్రీమద్బ్రహ్మతంత్రస్వతంత్ర పరకాలయతీన్ద్ర మహాదేశికేభ్యో నమః

ముహవురై.

ஶ்ரியை நம :

ஸ்ரீமதே ஹயக்ரீவாய நம:

ஸ்ரீமச்சடகோப யதிராஜ நிகமாந்த தேஶிகேப்யோ நம:
ஆழ்வாரெம்பெருமானார் தேஶிகா திருவடிகளே ஶரணம்
ஸ்ரீமத் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால யதீந்த்ர
மஹாதேஶிகேப்யோ நம:

# முகவுரை

**ஸ்ரீ**மந்நாராயண லக்ஷ்மீரூப திவ்யதம்பதி நியமித விஷ்வக்ஸேநோபதிஷ்ட ரஹஸ்யாதி ஸர்வ விஶேஷார்த்த விஶதரான நம்மாழ்வார், விஶிஷ்டாத்வைத பாஷ்யகாரர்களான ப்ரஹ்ம

---

மேலே, தெலுங்கிலுள்ள புனிதமான வரிகள ஸ்ரீபரகால மடத்தில் சுமார் ஐம்பது, அறுபது வருஷங்களுக்குமுன் வெளியிட்ட குருபரமபரை பரபாவம் தெலுங்கெழுத்துப் பதிப்பு முகவுரையின் தொடக்கமாகும.

1. இந்த மூவாயிரப்படி குருபரமபரா ப்ரபாவத்தை அருளிச்செய்தவர் ஸ்ரீபரகால மடத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத பரமஹம்ஸேத்யாதி தருதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகாலயதீந்த்ர மஹாதேசிகன ; [தொடர்ச்சி மறு பக்கம் காண்க

நந்த்யாதிகளுக்குப் பின்பு, இந்தக் கலியுகாரம்பத்தில் ஸ்ரீமத் வேதாந்த ஸித்தாந்தத்துக்கு ப்ரவர்த்தகராஞர். அந்த நம்மாழ்வாரிடத்தில் யோகதசையிலே ஸர்வ ரஹஸ்ய திவ்ய ப்ரபந்த வ்யாஸ ஸூத்ரார்த்தாதிகளை யெல்லாம ஸ்ரீமந்நாத முனிகள் அதிகரித்தார். அன்று முதல் ஶிஷ்ய ப்ரஶிஷ்ய முகத்தாலே அவிச்சின்னமாய் ஸர்வ ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ஸர்வ ரஹஸ்யாதி விஶேஷார்த்தங்களெல்லாம் ப்ராப்தங்களாகையாலே 'நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம்' என்று தேஶிகர் அருளிச் செய்தபடியே, இந்த வத்யாத்ம ஸம்பரதாயத்துக்கு ஸ்ரீமந் நாதமுனிகள் ப்ரதம ப்ரவர்த்தகராஞர. அந்த ஸ்ரீமந் நாதமுனி ஸம்ப்ரதாய பரம்பரையாலே எம்பெருமாஞர் ஸ்ரீபாஷ்யாதிகளைச் செய்தருளி எழுபத்து நாலு ஸிம்ஹாஸஞதிபதிகளுக்குத் திருவாழி திருச்சங்குகளையும, அவர்களில நால்வருக்கு ஸ்ரீபாஷ்ய ஸ்ரீகோஶங்களையும். அந்நால்வர்களில் ஒருவருக்கு ஸ்ரீபாஷ்ய பகவத்விஷய ஸ்ரீகோஶங்களையும் ப்ரஸாதித்தருளி, அவர்கள் முகமாக ஸர்வ ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும திருமந்த்ர மந்த்ரார்த்த ஸ்ரீபாஷ்ய பகவத் விஷயங்களை உபதேஶிக்கும்படி நியமித்தருளிஞர். பின்பு ஸ்ரீமத் வேதாந்த தேஶிகா ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வ பௌமராய் எழுந்தருளியிருந்தார். பின்பு இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் மூன்று மடாதிபதிகள் அவரவர்களாசார்யாள் நியமனத்தாலே ஸிம்ஹாஸஞதிபதிகளாய் தமமை ஆஶ்ரயித்தவர்களுக்குத் திருமந்த்ர மந்த்ரார்த்தாதிகளை உபதேஶித்துக் கொண்டு வருகிஞர்கள் அந்த மடாதிபதிகள் மூவ்வரில் முதல்வர் ஸ்ரீப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி, இரண்டாமவர் ஸ்ரீமதஹோபிலம் ஸ்ரீ ஆதிவண் ஶடகோபஸ்வாமி. மூன்ருமவர் வானமாமலை ஸ்வாமி. ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமி ஸாக்ஷாத் தேஶிகர் திருவடிகளை ஆஶ்ரயித்தவர். அஹோபிலம் ஸ்ரீ ஆதிவண் ஶடகோபஸ்வாமி, ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி திருவடிகளான கடிகாஶதமம்மாள் திருவடிகளை

முன் பக்கத் தொடர்ச்சி]

2. இதைத தெலுங்கில் வெளியிட்டது ஸ்ரீபரகாலமடத்து யதீந்த்ரர்கள்;

3. இதைத் தமிழில் அச்சிடுவது ரொம்பவும அவசியம் என்று அநுக்ரஹித்ததும் ஸ்ரீமத் பரமஹம்ஸேதயாதி ஸ்ரீபரகால மடத்து யதிஶ்வரர்களே.

ஆகவே, ஸ்ரீமத் பரகாலமடத்தில் ஸேவைதரும ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவப பெருமாள் க்ருபை நமமஞேக்குப் பரிபூர்ணமாகக கிடைக்கவே ஒரு ரக்ஷையாக மேற்படி தெலுங்கு வரிகளை அப்படியே பளாக் செய்வித்து, ஸ்ரீபரகாலமடததில் பரிபாலனம செய்த—செய்யும் யதிஸார்வ பௌமர்களின் திருவடிகளை த்யானம செய்து இதில் சேர்ததிருக்கிரும். — லிப்கோ பதிப்பகத்தார்.

ஆஶ்ரயித்து ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸாக்ஷாத்காராதி மஹா ப்ரபாவத்தை அடைந்தவர். வானமாமலை ஸ்வாமி ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி திருவடிகளான புருஷோத்தம தேஶிகரென்கிற கிடாம்பிநயினார் திருவடிகளான மணவாள மஹாமுனிகள் திருவடிகளை ஆஶ்ரயித்தவர். ஸ்ரீ ப்ரஹ்ம தந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமிக்குத் திருவாராதனம் ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவர். அஹோபிலம் ஸ்ரீ ஆதிவண் ஶடகோப ஸ்வாமிக்குத் திருவாராதனம ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹர். வானமாமலை ஸ்வாமிக்கு திருவாராதனம் அரங்கநகரப்பன்.

இந்த லக்ஷ்மீஹயக்ரீவர் ஸரஸ்வதீ பீடத்தில் ஸரஸ்வதி திருவாராதனமாயிருந்து எம்பெருமானார் திக்விஜயம் செய்தருளிக் கொண்டு எழுந்தருளினபோது ஸரஸ்வதி ஸ்ரீபாஷ்யத்தை ஶிரஸா வஹித்து தேவரீரே ஸ்ரீபாஷ்யகாரரென்று திருநாமம் சாத்தி தம் திருவாராதனமான ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவரையும் எழுந்தருளப்பண்ணிக் கொடுத்து விட்டாள். அந்த ஹயக்ரீவரை எம்பெருமானார் ஆராதித்துக்கொண்டு வந்து தம் சரமதஶையில் திருக்குருகைப்பிரான் பிள்ளானுக்கு பிரஸாதித்தருளினார். அந்தப் பிள்ளான்முதல் த்ரிபூருஷம் திருவாராதனம் செய்தருளி நாலாவரான புண்டரீகாக்ஷர் திருவாராதனம் பண்ணிக்கொண்டிருக்கும்போது ஸ்ரீமத் வேதாந்ததேஶிகர் திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீ ஹயக்ரீவரை ப்ரத்யக்ஷீகரித்து அவர் கடாக்ஷ விஶேஷம் பெற்றபோது அந்த புண்டரீகாக்ஷருக்கும் தேஶிகருக்கும ஸ்ரீ ஹயக்ரீவர் ஸ்வப்நம் காட்டினபடியே புண்டரீகாக்ஷரும் இந்த ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவரை எழுந்தருளப் பண்ணிககொடுக்க, ஸ்ரீமத் வேதாந்த தேஶிகரும ப்ரதிக்ரஹித்து அதிஸந்தோஷத்தோடே நித்யமாக திருவாராதனம செய்தருளிக் கொண்டுவந்து. தம சரமதஶையில் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமிக்கு திருவாராதனமாக ப்ரஸாதித்தருளினார் அன்றுமுதல் ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமி ஸ்ரீமடத்தில் ஆஸ்தானக்ரமமாக திருவாராதனம் விஶேஷமாக ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவர் கண்டருளுகிறார்.

## * அவர்களுடைய ஆஸ்தான கிரமம்

1. ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமி. இவர் திவ்ய ஸூரி ஸ்தோத்ரம முதலானவை செய்தருளினார்.

2 ஸ்ரீ வாத்ஸ்ய வேதாந்த ராமாநுஜ ஸ்வாமி என்கிற த்விதீய பரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி. இவர் பன்னீராயிரப்படி குருபரம்பரா ப்ரபாவம் முதலானவை செய்தருளினார்.

---

* இது ஸ்ரீமத் பரகால மடத்தில் வெளியிடபபட்டுள்ள தெலுஙகு பதிப்பில் விசதமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதை ஸங்க்ரஹித்து இங்கே கொடுத்துள்ளோம்.

3. த்ருதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்ரீநிவாஸ ஸ்வாமி. இவர் மூவ்வாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவம் முதலானவை செய்தருளினார்.

4. ஸ்ரீ பரகால ஸ்வாமி.

5 ஸ்ரீ வேதாந்தராமாநுஜ ஸ்வாமி.

6 ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி.

7. ஸ்ரீ நாராயண ஸ்வாமி.

8 ஸ்ரீ ரங்கராஜ ஸ்வாமி.

9. ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி.

10. ஸ்ரீ யதிராஜ ஸ்வாமி.

11. ஸ்ரீ வரத ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி.

12. ஸ்ரீ பராங்குச ஸ்வாமி.

13 ஸ்ரீ கவிதார்கிக ஸிம்ஹ ஸ்வாமி.

14. ஸ்ரீ வேதாந்த யதிவர்ய ஸ்வாமி.

15. ஸ்ரீ ஜ்ஞாநாப்தி ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால ஸ்வாமி.

16 ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி.

17 ஸ்ரீ வ்ரதவேதாந்த ஸ்வாமி.

18. ஸ்ரீ வராஹஸ்வாமி.

19. ஸ்ரீ வேதாந்த லக்ஷ்மண ஸ்வாமி.

20. ஸ்ரீ வரதவேதாந்த யோகீந்த்ர ஸ்வாமி.

21. ஸ்ரீ பெரிய பரகால ஸ்வாமி.

இவர் நாலாயிர திவ்யப்பிரபந்தங்களுக்கும், தேசிக ப்ரபந்தங்களுக்கும் வ்யாக்யானமும், யதிப்ரதிவந்தன கண்டனமும், ஆசார்யாவதார கட்டார்த்தமும், பரகாலாஸ்தான

பத்ததியும், வேதாந்தோபயுக்தங்களாயும் பிராட்டிக்கு விபுத்வோபாயத்வாதி ஸ்தாபகங்களாயு மிருந்துள்ள மிதப்ரகாஶிகா ஸார ஸங்க்ரஹாதி பரஶ்ஶத க்ரந்தங்களையும் செய்தருளினார். இந்த ஸ்ரீ ஸ்வாமி திருவடிகளில் மைஸூர் ஸமஸ்தாநாதீஶ்வரரான தொட்ட க்ருஷ்ணராஜ ஒடயர் மஹாராஜஸ்ரீ செலுவாஜம்மண்ணி முதலான மஹிஷிகளோடேகூட குலக்ரமாகதமான பஞ்சஸம்ஸ்காராதி வைஷ்ணவ தீக்ஷையையடைந்து விஶேஷ ப்ராவண்ய முடையவரா யிருந்தார். இந்த ஸ்வாமி ஆர்த்தப்ரபத்தி செய்தருளி ஸமஸ்தமான ஸ்வாமிகளும் கண்டு மகிழும்படி ஸ்ரீரஹஸ்யத்ரய ஸாரமே முக்ய ப்ரமாண மென்றும், அத்தைச் செய்தருளின தேஶிகரே ஆசார்யோத்தமரென்றும தெளியப்படுத்தி 60 சாதுர்மாஸ்யங்கள் தர்ஶந ப்ரவசனங்கள் பண்ணிக்கொண்டெழுந்தருளியிருந்து, தாம் கோலின காலத்திலேயே ஶா. ஶ. 1660-வதான காளயுக்தி வர்ஷத்தில் பாத்ரபத பஹுள ப்ரதிபத்தில் திருநாட்டுக் கெழுந்தருளினார்.

22. ஸ்ரீநிவாஸ பரகால ஸ்வாமி

இவர் பிராட்டிக்கு விபுத்வோபாயத்வ ஸமர்த்தகங்களான லக்ஷ்ம்யுபாயத்வதீபம், ந்யாஸ ப்ரகாஶிகா, ந்யாஸ ப்ரகாஶிகா விவ்ருதி, பரகால மங்களம், பரகால வைபவ ப்ரகாஶிகா ஸ்தோத்ரம் முதலான பரஶ்ஶத க்ரந்தங்களைச் செய்தருளினார்.

23. ஸ்ரீ வேதாந்த பரகால ஸ்வாமி

24. ஸ்ரீ அபிநவ ஸ்ரீநிவாஸ பரகால ஸ்வாமி

25. ஸ்ரீ ராமாநுஜ பரகால ஸ்வாமி

26 ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ர கண்டாவதார பரகால ஸ்வாமி

27. ஸ்ரீ வேதாந்த ப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமி

28. ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமி

29 ஸ்ரீ ஸ்ரீநிவாஸ தேஶிகேந்த்ர ப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமி

30 ஸ்ரீ ரங்கநாதப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமி

31. ஸ்ரீ க்ருஷ்ணப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமி

32. ஸ்ரீ வாகீசப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமி

33. ஸ்ரீமத் அபிநவரங்கநாத ப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமி

34. ஸ்ரீமத் அபிநவ ஸ்ரீநிவாஸ ப்ரஹ்மதந்த்ர பரகால ஸ்வாமி

# ஸ்ரீ அஹோபிலமடத்துத் திருமுடியடைவு

1 ஆதிவண் ஶடகோபஸ்வாமி
2. ஸ்ரீமந்நாராயணஸ்வாமி.
3. ஸ்ரீபராங்குஶஸ்வாமி
4. ஸ்ரீநிவாஸ ஸ்வாமி.
5. ஸ்ரீஶடகோபஸ்வாமி.
6. ஸ்ரீமத் ஷஷ்ட பராங்குஶஸ்வாமி.
7 ஸ்ரீஶடகோபஸ்வாமி.
8. ஸ்ரீ பராங்குஶஸ்வாமி.
9. ஸ்ரீமந் நாராயண ஸ்வாமி.
10. ஸ்ரீவண் ஶடகோப ஸ்வாமி.
11 ஸ்ரீநிவாஸஸ்வாமி
12. ஸ்ரீமந் நாராயண ஸ்வாமி
13. ஸ்ரீ வீரராகவஸ்வாமி.
14. ஸ்ரீமந் நாராயண ஸ்வாமி.
15. ஸ்ரீ கல்யாணவீரராகவஸ்வாமி.
16 ஸ்ரீ ஶடகோபஸ்வாமி.
17. ஸ்ரீ வீரராகவ வேதாந்தஸ்வாமி
18. ஸ்ரீமந்நாராயணஸ்வாமி.
19. ஸ்ரீநிவாஸஸ்வாமி.
20. ஸ்ரீ வீரராகவஸ்வாமி.
21. ஸ்ரீ பராங்குஶஸ்வாமி.
22. ஸ்ரீமந் நாராயணஸ்வாமி
3. ஸ்ரீ வீராராகவஸ்வாமி.
24. ஸ்ரீ பராங்குஶ ராமாநுஜஸ்வாமி.
25. ஸ்ரீ ஸ்ரீநிவாஸஸ்வாமி
26. ஸ்ரீ ரஙகநாதஸ்வாமி.
27. ஸ்ரீ வீரராகவஸ்வாமி.
28. ஸ்ரீ ரங்கநாதஶடகோபஸ்வாமி.
29. ஸ்ரீ பராங்குஶ லக்ஷ்மணஸ்வாமி.
30 ஸ்ரீ ஸ்ரீநிவாஸ வேதாந்தஸ்வாமி.
31 ஸ்ரீமந்நாராயண வேதாந்தஸ்வாமி.
32 ஸ்ரீ வீரராகவஸ்வாமி.
33 ஸ்ரீ ஶடகோபஸ்வாமி.
34 ஸ்ரீ ஶடகோபராமாநுஜஸ்வாமி.
35 ஸ்ரீ ரங்கநாதஸ்வாமி.
36. ஸ்ரீ ஸ்ரீநிவாஸஸ்வாமி.
37. ஸ்ரீ வீரராகவ ஶடகோபஸ்வாமி.
38 ஸ்ரீ ஸ்ரீநிவாஸஶடகோபஸ்வாமி.
39 ஸ்ரீ பராங்குஶஸ்வாமி.
10, ஸ்ரீ ரங்கநாத ஶடகோபஸ்வாமி.
41. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஶடகோபஸ்வாமி.
42. ஸ்ரீ ஸ்ரீரங்க ஶடகோபஸ்வாமி
43. ஸ்ரீ வீரராகவ ஶடகோபஸ்வாமி.
44. ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீவேதாந்த தேசிகஸ்வாமி.

# முநித்ரய குரு பரம்பரை

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன்

|

பரஹமதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர்

|

கடிகாசதம் அம்மாள

|

வரத விஷ்ணவாசாரயா

|

மஹா தயாதீசர்

|

வாத்ஸ்ய அஹோபிலாசாரயர்

|

ஷஷ்டபராங்குஶ ஸ்வாமி

|

தாத தேசிகன

|

வாத்ஸ்ய அநந்தார்யர்

|

ராமானுஜார்யர்

|

மஹாகுரு வெஙகடாசாரயா (பரவஸ்து)

|

வீரராகவாசாரயர்

|

ஸ்ரீரங்கபதி தேசிகர்

|

ரங்கநாத ஸ்வாமி

|

வேதாந்த ராமானுஜ (ஸாக்ஷாத) ஸ்வாமி (ஸ்ரீரங்கம்)

|

ஸ்ரீ கோபாலார்யமஹாதேசிகன் (திருக்குடந்தை)

# முநித்ரய குரு பரம்பரை (தொடர்ச்சி)

**ஸ்ரீ கோபாலார்யமஹாதேசிகன்** (திருக்குடந்தை)

ஸ்ரீநிவாஸ மஹா
தேசிகன்
(வததராயிருப்பு)

ஸ்ரீரங்கநாத
மஹா தேசிகன
(செய்யானம)

வேதாந்த ராமானுஜ
மஹா தேசிகன
ஸ்ரீரங்கம ஆணடவன
(வபூத்தூா)

ஸ்ரீநிவாஸ ராமா
னுஜ மஹா
தேசிகன
திருத்துரைப்பூண்டி
ஆணடவன்
* (வீளக்குடி)

வங்கிபுரம
**ஆண்டிகாடு**
**ஸ்ரீ வேதாந்த ராமானுஜ**
**மஹா தேசிகன்**

ஸ்ரீரங்கராமானுஜ மஹா தேசிகன்
†(கேதாணடி பட்டி)

அண்ணயாாய
மஹா தேசிகன்
(நாவல்பாககம)

ஸ்ரீ வேதாநத
ராமானுஜ மஹா
தேசிகன்

ஸ்ரீநிவாஸ தாத தேசிகன்
(வலையப்பேட்டை ஸ்வாமி)

திருமலை தாதாசார்ய ஸ்வாமி
(திருவரங்கம்)

நாவல்பாககம
நரஸிம்மாசார்ய ஸ்வாமி

அய்யர் தேவநாதாசாாய
ஸ்வாமி

---

* ஆண்டவன் ஸந்நிதி பரமபரையை அடுத்த பககம பாாககவும

† கேதாண்டி பட்டி ஸ்வாமி பரமபரையை 37ம பக்கத்தில் பார்க்கவும.

# முநித்ரய குரு பரம்பரை (தொடர்ச்சி)

## ஆண்டவன் ஸந்நிதி பரம்பரை

ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன்
(விளக்குடி)
(திருத்துறைப்பூண்டி ஆண்டவன்)

|

ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் (பெருமாள் கோவில்)
(பெரிய ஆண்டவன்) *

|

ஸ்ரீ நாராயண மஹா தேசிகன்
|
பௌண்டரீகபுரம
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ
மஹா தேசிகன்
|
ஸ்ரீ ரங்கநாத
மஹா தேசிகன்
(மன்னார்குடி)
|
ஸ்ரீ ஸ்ரீநிவாஸ
மஹா தேசிகன்
(வீணாற்றங்கரை
ஸ்ரீமத ஆண்டவன்)

ஸ்ரீபாதுகா
ஸேவக ராமானுஜ
மஹா தேசிகன்
(சின்ன ஆண்டவன்)
(வேளிய நல்லூர்)
|
ஸ்ரீ வேதாந்த ராமானுஜ
மஹா தேசிகன்
தேரெழுந்தூர் (நம்மாண்டவன்)
|
ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன்
ஆக்கூர் (எங்களாண்டவன்)
|
ஸ்ரீமதாண்டவன்
ஸ்ரீ ரங்கநாத மஹா தேசிகன் (தென்பிறை)
|
ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன்
(திருக்குடந்தை ஆண்டவன்)

ஸ்ரீநிவாஸ ராமானுஜ
மஹாதேசிகன்
(காடந்தேத்தி)

---

* இந்த ஸ்வாமியிடமிருந்து தோன்றிய குரு பரம்பரைத் தொடர்ச்சியை 38ம் பக்கம் பார்க்க.

ஸ்ரீ ரங்கராமானுஜ மஹா தேசிகன்
(கேதாண்டி பட்டி)

- மஹாமஹோ பாத்யாய கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி
- ஈச்சம்பாடி சடகோபா சார்ய ஸ்வாமி
- ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹா தேசிகன (திருவஹீந்திரபுரம்)
  - ஸ்ரீநிவாஸ மஹா தேசிகன் (கருடபுரம ஸவாமி)
    - திருமலே ஈச்சமபாடி வீரராகவாசார்ய ஸ்வாமி (மதுராந்தகம்)
  - ஸ்ரீ ராஜகோபால மஹாதேசிகன் (புலவனூர் ஸ்வாமி)
  - வங்கீபுரம் கிருஷ்ணமாச் சாரய ஸவாமி
    - நவநீதம ஸ்ரீ ராமதேசிகாசார்ய ஸ்வாமி (ஒப்பிலியப்பன் ஸந்நிதி)
  - சேட்டலூர பகவத் விஷயம நரஸிம்ஹாசாரய ஸ்வாமி
- வரதராமானுஜ மஹா தேசிகன் (டெங்கணிக கோட்டை)
- வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் (திருப்பதி)
  - ஸ்ரீ ரங்கராமானுஜ மஹா தேசிகன் (கோழியாலம்ஸ்வாமி)
    - உத்தமூர் வாத்ஸ்ய சக்கரவர்த்தி வீரராகவாச் சார்ய ஸ்வாமி

## ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் (பெருமாள் கோயில)

(பெரிய ஆண்டவன)

- *ஸ்ரீ நாராயண மஹா தேசிகன
- ஸ்ரீ க்ருஷ்ண தாத தேசிகன (திருப்புட்குழி ஸ்வாமி)
  - கோபால தேசிகன (வில்லியம்பாக்கம)
    - கொண்டங்கி ஸுந்தரவரத தாதாச்சாரியர்
    - அய்யா க்ருஷ்ண தாத தேசிகன்
    - கொண்டங்கி லக்ஷ்மீகுமார தாதாச்சாரியர்
- ஸ்ரீரங்கம ஆண்டவன் ஸந்நிதி பரமபரை †

* இந்தப் பரமபரையை 36ம பக்கம் பார்க்கவும.

† இந்தப் பரமபரையை 36மே பககம பாரககவும.

---

## க்ருதஜ்ஞதாஞ்ஜலி

இநத க்ரந்தம் அச்சாகிக் கொண்டிருந்த ஸமயத்தில், எங்கள வித்வான்களுக்கு உறுதுணையாகச் சில ப்ராசீனமான க்ரந்தங்களை ஸமயததில் தந்துதவிய,

1) Sri Vedanta Desika Seventh Centenary Celebrations Central Committee தலைவர் தேசிக தர்சந ரக்ஷாமணி, தார்மிக பூஷணம, ஸ்ரீ வைஷ்ணவ தர்மதீபம ஸ்ரீ உபய வே மதுரூஸ் மாடபூசி ஸுதர்சனம் அய்யங்கார் ஸ்வாமிக்கும ("மநோநிதி", 41, எட்வர்ட் எலியட்ஸ் ரோட், மைலாபபூர, சென்னை-4)

2) ஸ்ரீ உபய வே. சாக்கோட்டை ரா. சாரங்கபாணி ஐயங்கார் ஸ்வாமிக்கும் (பொதுக் காரியதரிசி, தக்ஷிண பாரத ஹிந்தீ ப்ரசார ஸபா, சென்னை-17)

எங்களுடைய அஞ்ஜலி பூர்வகமான க்ருதஜ்ஞதையை விஜ்ஞாபிததுக் கொள்கிறோம.

— லிப்கோ பதிப்பகத்தார்

# ஒரு விண்ணப்பம்

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸம்ப்ரதாயஸ்தர்கள் எல்லோருக்கும் ஸமாச்ரயணம், பரந்யாஸம் ஸ்ரீ பாஷ்ய பகவத்விஷயாதி காலக்ஷேபம் முதலான ஆத்மோஜ்ஜீவனார்த்தமான உபகாரங்களைச் செய்துகொண்டு இன்றைய தேதியில் (ஸ்ரீ கீலக ஹு புரட்டாசித் திருவோணம்) ஸ்ரீ பரகாலமடம் ஸ்ரீமத் அஹோபில மடம், ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம் ஆகிய மடாஸ்தானங்களை அலங்கரித்துவரும் யதிவர்யர்களின் திருநாமங்களையும், மற்றும் இத்தகைய மஹோபகாரம் செய்துவரும் க்ருஹஸ்தர்களான ஆசார்ய மஹா புருஷர்களின் திருநாமங்களையும் அடியோங்களுக்குத் தெரிந்தவரையில் கீழே கொடுத்துள்ளோம்.

க்ருஹஸ்தாச்ரமத்தில் எழுந்தருளியிருந்து சிஷ்யர்களை உஜ்ஜீவிக்கச் செய்துகொண்டிருக்கும் ஆசார்யர்கள் இன்னும் அனேகர் இருக்கலாம். அவர்களைப்பற்றிய விவரங்களைப் பெரியோர்கள் எமக்குத் தெரிவித்தால் அடுத்த பதிப்பில் சேர்த்து வெளியிட முயலுவோம்.

## யதிவர்யர்கள்

### ஸ்ரீ பரகால மடம்

1. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமத் அபிநவ ஸ்ரீநிவாஸ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர பரகால யதீந்த்ர மஹாதேசிகன், ஸ்ரீ பரகால மடம், ஸ்ரீ தேசிகர் ரோட், மைசூர்.

### ஸ்ரீ அஹோபில மடம்

2. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்கநாத தேசிக யதீந்த்ர மஹாதேசிகன், முக்கூர், (வடாற்காடு ஜில்லா)

### ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம்

3 ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன்

(விண்ணுற்றங்கரை ஸ்ரீமத் ஆண்டவன்). பௌண்டரீகபுரம், ஆண்டவன் ஆச்ரமம், ஸ்ரீரங்கம், திருச்சி-6

4. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன், பெரியாச்ரமம், ஸ்ரீரங்கம், திருச்சி-6

## க்ருஹஸ்தாச்ரமத்திலுள்ள ஆசார்யர்கள

### ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி பரம்பரை

ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி உத்தமூர் வாத்ஸ்ய சக்ரவர்த்தி வீரராகவாசார்ய ஸ்வாமி, 25, நாதமுனி தெரு, தியாகராய நகர், சென்னை-17.

### ஸ்ரீமத் அண்ணயார்ய மஹாதேசிகன் பரம்பரை

2. ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி திருமலை தாதாசார்ய ஸ்வாமி, (திருவரங்கம்) ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி தெற்கு மாட வீதி, திருப்பதி.

3. ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி அய்யா தேவநாததாதாசார்ய ஸ்வாமி. சு. நாவல்பாக்கம், (வயா) வந்தவாசி, வடாற்காடு ஜில்லா.

### திருவஹீந்திரபுரம்


### ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகன் பரம்பரை

4. ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி ஒப்பிலியப்பன் ஸந்நிதி, வித்வான், சிரோமணி, வித்யா விசாரத, வங்கீபுரம, நவநீதம், ஸ்ரீராம தேசிகாசார்ய ஸ்வாமி, ஒப்பிலியப்பன் ஸந்நிதி, (வயா) திருநாகேச்வரம், தஞ்சாவூர் ஜில்லா

### ஸ்ரீமத் கருடபுரம் ஸ்வாமி பரம்பரை

5. ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி திருமலை ஈச்சம்பாடி (மதுராந்தகம்) வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாகுரவே நம:

ஸ்ரீமத் த்ருதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி

அருளிச்செய்த

# குருபரம்பரா ப்ரபாவம்

---

## தனியன்கள்

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்ய பூஷணம் |
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேஶிகம் ||

ஸ்ரீமாந் பர்யாயராமாநுஜ யதிந்ருபதிர்-
ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரோ
வேதாந்தாசார்ய தீவ்யத்பதநளிந
ரஸாஸ்வாதஸச்சஞ்சரீக: |
ஆசார்யாராதித ஸ்ரீஹயவதந-
ஸமாராதநோ ஹஸ்திநாதோ
யோகீஶாநஸ் ஸ ஜீயாதநவதி-
மஹிமா நித்ய மத்யத்புதஸ்ரீ: ||

---

# அவதாரிகை

ஆசார்யாநஸ்மதீயாந் ஶ்ருதிமகுடகுரும்
ஸம்யமீந்த்ரம் ஶடாரிம்,
ஸர்வாந் திவ்யாம்ஶ்ச ஸூரீந் ப்ரதமமபி குரும்
ஶ்ரீவிஶிஷ்டம் ப்ரணம்ய |
பூர்வாசார்யைரநேகைர் லிகிதமபி புரா
விஸ்தரம் தேஶிகாநாம்,
பங்க்தேர் மாஹாத்ம்யமத்ய ப்ரதிபதநயதஸ்
ஸங்க்ரஹால் லிக்யதேத்ர ||

ஶ்ரிய:பதியினுடைய பரமகாருணிகதையாலே ஆஶ்ரிதோஜ்ஜீவ நார்த்தமாக ப்ரவர்த்திப்பிக்கப்பட்ட ஶாஸ்த்ர ப்ரதீபத்தைக் கொண்டு இவ்விருள்தருமா ஞாலத்திலுள்ள விவேகிகள் தத்வஹிதங்களை ஸதாசார்யமுகமாகத் தெளிந்து, உபாயாநுஷ்டாநம் பண்ணி, அதனால் ஶ்ரிய:பதி திருவுள்ளமுகந்து தருகிற நித்யகைங்கர்யமஹா புருஷார்த்தத்தை அடையவேண்டுகையாலும், அவ்வர்த்தங்களைத் தெளியஉபதேஶிக்கிற ஆசார்யன் ஸத்ஸம்ப்ரதாயஸித்த ஸதாசார நிஷ்டனாயிருக்கவேண்டுகையாலும், அந்த ஸம்ப்ரதாயத்துக்கும் ஶாஸ்த்ரமூலத்வஸம்ப்ரதிபத்தி உண்டாயிருக்கவேண்டுகையாலும் முற்பட குருபரம்பராப்ரபாவத்தை அவஶ்யம் அறியவேணும். அது தன்னிலும், தனக்கு வேண்டினபடி உத்ப்ரேக்ஷாதிகளைப்பண்ணுகிற காவ்யம்போலு மன்றிக்கே, அத்யந்தபக்தியாலேயாதல் ஒரு விஶேஷம் சொல்லவேணுமென்கைக்காகவாதல் ஶாஸ்த்ரஸம்மதியைத் தவிர்ந்ததாகச் சில ஆசார்யவ்ருத்தாந்தங்களைச் சொல்லுகிற க்ரந்தங்கள்போலு மன்றிக்கே, யதார்த்ததர்ஶிகளாய் யதாத்ருஷ்டார்த்தவாதிகளாய் யதாஶாஸ்த்ராநுஷ்டாதாக்களுமான தேஶிகர்களுடைய அநுஷ்டாநத்தை யதாத்ருஷ்டார்த்தவாதிகளான தேஶிகர்களுடைய உபதேஶபரம்பரையாலே அறிந்து, யதாவத்தாக விஸ்த்ருதமாய் நம்மாசார்யரான த்விதீயப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர சீயர்செய்தருளின பன்னீராயிரப்படி குருபரம்பராப்ரபாவம், "உபதேஶாத்தரிம் புத்த்வா" என்கிற அதிகாரிகளான மிதஜ்ஞஸாதுக்களுக்கு துர்க்ரஹமாயிருக்கையாலே, இப்போது அவர்களாலே நியுக்தனான அடியேனாலே ஸங்க்ரஹிக்கப்படுகிற இக் குருபரம்பராப்ரபாவத்தைப் பெரியோர்கள் அங்கீகரிக்கக்கடவர்கள்.



குரு ரம்பரையின் ப்ரதம குருவான

ஸ்ரீமந்நாராயணன்

# ப்ரவேசம்

ஶ்ரிய:பதியாய், அவாப்தஸமஸ்தகாமனுய், அநந்த கல்யாண குண பரிபூர்ணனுய், ஆதிமத்யாந்தரஹிதனுய், நிஸ்ஸமாப்யதிகனுய், ஸர்வஸுஹ்ருத்தாய், ஆஶ்ரிதபலப்ரதனுயிருக்கிற புருஷோத்தம ஸ்ரீமந்நாராயணன் அநாதிகர்மவஶ்யாளான ஜீவாத்மாக்களைத் திருத்த நினைத்தருளி யார்க்கும் எட்டவொண்ணுத இடமான பரம பதத்தைவிட்டு வ்யூஹமான க்ஷீராப்தியில் ஜாகரூகனுய்த் திருப் பள்ளிகொண்டிருக்க, அவன் காட்டின உபாயத்தைப் பலரும் காணு மலிருந்தும் சிலர் கண்டும் உபாயாநுஷ்டாநம் பண்ணுமலிருக்க, உபாயாநுஷ்டாநம் பண்ணினவர்களுக்கு பலத்தைக் கொடுத்தும் அவ்விடம் துஷ்ப்ரவேஶமென்று நினைத்து ஸர்வஸுலபங்களான விபவங்களைச் செய்தருள, அந்த விபவங்களிலும் சிலர் உள்ளபடி அறிந்து உபதேஶித்த உபாயத்தையும் கேட்டு அநுஷ்டிக்கவும் சிலர் ஆஸுரஸ்வபாவத்தாலே உள்ளபடி யறியாமலும் விஶ்வரூபமும் இந்த்ரஜாலமென்று இகழ்ந்திருக்கவும், அங்ஙனமன்றிக்கே பின் புள்ள ஸத்வோத்தரரும் "அன்றென்னைப் புறம்போகப் புணர்த்த தென்செய்வான்" என்று புலம்பிநிற்க, அதுவும் துஷ்கரமென்று நினைத்து அந்தர்யாமியாய்ச் சில ஜ்ஞாநவிகாஸங்களைச் செய்ய, அப் போது சிலர் யோகத்தாலே ஆராதித்தும் சிலர் ஸமிதாதிகளை ஹரிக்கக் கொடுத்த லவித்ராதிகளைக்கொண்டு மாம்ஸச்சேதநம் பண்ணு மாப்போலே அந்த ஜ்ஞாநவிகாஸத்தைக் கொண்டு தேஹாத்மவாதி களாயும் தேவதாந்தரவாதிகளாயும்நிற்க, அதுவும் துஶ்ஶகமென்று நினைத்து, "த்ருஷ்ட ஏவ ஹி நஶ் ஶோக மபநேஷ்யதி ராகவ:" என்றும், "கண்டவர் தம் மனம் வழங்கும் கண்ணபுரத்தம்மான்" என்றும் சொல்லுகிறபடியே த்ருஷ்டமாத்ரத்தாலே ஸத்வப்ரதனை எம்பெருமான், "ஸுபகஶ் சித்ரகூடோஸௌ கிரிராஜோபமோ கிரி: | யஸ்மிந் வஸதி காகுத்ஸ்த:" என்கிறபடியே கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலான திவ்யதேஶங்களில் அர்ச்சாரூபமாக எழுந்தருளியிருக்க, அந்தத் திவ்யதேஶங்களும் "யாவதா சித்ர கூடஸ்ய நரஶ் ஶ்ருங்காண்யவேக்ஷதே | கல்யாணாநி ஸமாதத்தே ந பாபே குருதே மந:" என்கிறபடியே ஸத்வப்ரதங்களாயிருக்க, அப்போதும் சில ஸத்வோத்தரர் வந்து ஆஶ்ரயித்தும் அந்த ஸத் வோத்தரரை முன்னிட்டுச் சிலர் உஜ்ஜீவித்தும், பின்பு கால வைஷ

ம்யத்தாலே அஜ்ஞாநாவிவேகதந்த்ராப்ரமாதிகளாலே கலுஷமதிகளாய்ச் சிலர் அந்தத் திவ்யதேஶங்களிலும் சென்று உஜ்ஜீவியாமலிருக்க, அதுவும் ஸுகரமன்றென்று நினைத்து ஜநபத க்ராமங்கள் தோறும் அதிஷ்டாநம் பண்ணியிருக்க, அவ்வளவிலும் காலவைஷம்யத்தாலே சென்று அடையாமலிருக்க, ஸாளக்ராமாதி ரூபியாய் க்ருஹங்கள்தோறும் அதிஷ்டாநம் பண்ணியிருக்க, அப்போதும் சிலர் உபேக்ஷித்து நிற்க, பின்பும், "ஸம்பவாமி யுகே யுகே" என்றும், "யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர் பவதி" என்கிற ஶ்லோகத்திலும், "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி" என்றும், "உயிரளிப்பானெந்நின்ற யோனியுமாய்ப்பிறந்தா யிமையோர் தலைவா" என்றும் சொல்லுகிற விபவங்கள்போலுமன்றிக்கே, "பின்னானார் வணங்குஞ்சோதி திருமூழிக்களத்தானாய்" என்கிறபடியே ஸர்வஸுலபனாயும் அர்ச்சகபராதீநனாயும், யாவத்காலபாவியாயும் இருந்துள்ள அர்ச்சாவதாரத்தையும் இந்த ஜீவாத்மாக்கள் உபேக்ஷித்தால் இனி என் செய்யக்கடவோம்? என்று ஆராய்ந்து, "மாநுஷே சிந்தயாமாஸ ஜந்மபூமி மநாத்மந:" என்கிற தன் அவதாரத்தைக் காட்டிலும் "கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணஶ்யதி" என்கிறபடியே ப்ரயோஜகமான உத்கர்ஷத்தை யுடைய பக்தர்களையும் தேவீ பூஷணாயுதங்களையும் அவதரிப்பித்து அவர்களைக் கொண்டு கார்யம் கொள்ளவேணுமென்று நினைத்தருளி, அதுதானும் "விஷ்ணோஸ் ஸஹாயாந் பலிந: ஸ்ருஜத்வம் காமரூபிண:" என்கிறபடியே சில அதிகாரிகள் நியமித்தாற்போலுமன்றிக்கே "அவதீர்ய க்ஷிதௌ யூயம் ஸுரயஶ் ஶாஸநாந் மம" என்றுதானே நியமித்து அவர்களிடத்திலும் "பூர்வோத்பந்நேஷு பூதேஷு தேஷு தேஷு கலௌ ப்ரபு: | அநுப்ரவிஶ்ய குருதே யத்ஸமீஹிதமச்யுத:" என்கிறபடியே தானும் அநுப்ரவேஶரூபஆவிர்பாவ விஶேஷத்தையும் பண்ணி, "ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும்|மக்நாநுத்தரதே லோகாந்காருண்யாச்சாஸ்த்ர பாணிநா" என்கிறபடியே ஒரு அபிநவாவதாரம் பண்ணினானென்னும்படி பண்ணுவித்து, தத்வஹித புருஷார்த்த ப்ரகாஶகமான வேதாந்தஸித்தாந்தத்தைப் பல ப்ரபந்தங்களாலும் பலவ்யாக்யாநங்களாலும் நிலை நிறுத்தி, அத்தாலே கர்மவஶ்யர்களான ஜீவாத்மாக்களும் ஸ்வரூபந்தெளிந்து உபாயத்திலே ப்ரவர்த்தித்துப்புருஷார்த்தத்தையடைந்து நித்யஸூரிகளோபாதி நித்யாநுபவம் பண்ணிக்

கொண்டிருக்கும்படியாகப் பண்ணவேணுமென்று நினைத்தருளி, ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் அவதரிப்பித்தான்.

இவ்வர்த்தத்தை ஸங்க்ரஹித்து வங்கிப்புரத்தாச்சி அருளிச் செய்த, "நிர்திஷ்டா மதுரிபுணா தயாகரேண ஸ்ரீரங்காதிஷு பஹுதாமஸு க்ஷமாயாம் | நித்யாஸ் தே ஶுபகுணஸௌரயோவதீர் ணாஸ்ஸம்ஸாரே ந குருவசோ ஹி லங்கநீயம்" என்கிறஶ்லோகத்தை கருடவாஹநபண்டிதரும் காவ்யரூபமான திவ்யஸூரிசரிதையில் சேர்த்தெழுதினர்.

இவர்களவதார விஶேஷத்தையும், ப்ரபந்தப்ராமாண்யத்தையும், மற்றுமுள்ள வைபவங்களையும், நம்மாசார்யர் செய்தருளின பன்னீராயிரப்படி குருபரம்பராப்ரபாவத்திலும், திருமலை ஸ்ரீநிவாஸாசார்யர் செய்தருளின ப்ரபந்த நிர்வாஹத்திலும் பரமதபங்கம் முதலான தேஶிகதிவ்யஸூக்திகளிலும் பரக்கக் கண்டுகொள்வது.

இவ்வாழ்வார்—ஆசார்யர்களுடைய அவதாராதி திவ்யசரித்ரங்களைக் கேட்கும்போது, பகவதவதாராதிகளை ப்ரதிபாதிக்கிற ஸ்ரீமத் ராமாயணாதிகளைக்காட்டிலும் விஶேஷப்ரதிபத்தி பண்ணிவரும்படி முன்னோர்கள் நடந்துவரக் காணாநின்றோம்; பின்னும் "ஏபாவம் பரமே" என்கிற பாட்டின்படியே வெறுத்திராதே, "இலிங்கத் திட்ட புராணத்தீரும்" என்கிற பாட்டின்படியே இக்குருபரம்பரா ப்ரபாவத்தைக் கொண்டு பாஹ்யாந்தரவிரோதிகளான சேதநர்களையும் பெருங்கருணையாலே யதாஶக்தி தெளியும்படி திருத்தவும் ப்ராப்தம்.

ஆழ்வார்களிலே நம்மாழ்வார் ப்ரதாநரேயாகிலும், மற்றையாழ்வார்கள் அவருக்கு அவயவபூதரேயாகிலும், ஆண்டாளும் எம்பெருமானுக்கு திவ்யமஹிஷி யாகையாலே எல்லாவாழ்வார்களுக்கும் உத்தேஶ்யையேயாகிலும், இங்கே அவதாரக்ரமத்தாலேஅநுஷ்டாந க்ரமத்தை அறிகைக்காக, அந்த க்ரமங்கள் பொய்கையாழ்வார் முதலாக விவரிக்கப்படுகின்றன. அதுதன்னிலும் முன்பாகவே அவதரித்த மதுரகவிகள் நம்மாழ்வாரை ஆஶ்ரயித்து நடத்திப் போந்தமையைச் சொல்லுகையாலே பின்பாக ஆய்த்து இத்தனை.

ஆழ்வார்கள் அவதரித்துச் செய்தருளினபடிகள் எங்ஙனே என்னில்:—

ப்ரவேஶம் முற்றிற்று



அவதார ஸ்தலமான ஸ்ரீ காஞ்சியில் ஸேவைதரும்

**பொய்கையாழ்வார்**

**பொய்கைப் பிரான், கவிஞர் போரேறு, பத்மமுநி, ஸரோயோகி, காஸார யோகி என்று போற்றப்படுபவர்**

# ஆழ்வார்கள் வைபவம்

## பொய்கையாழ்வார் வைபவம்

துலாயாம் ஶ்ரவணே ஜாதம் காஞ்ச்யாம் காஞ்சநவாரிஜாத் |
த்வாபரே பாஞ்சஜந்யாம்ஶம் ஸரோயோகிந மாஶ்ரயே ||

பாஞ்சஜந்யாம்ஶரான பொய்கையாழ்வார், ப்ரஹ்மநிர்மிதமாய் அயோத்யாதிகளிலும் வைத்து, "முத்திதரும் நகரேழில் முக்கியமாங் கச்சி" என்கிறபடியே ஶ்ரேஷ்டதமமான ஸ்ரீகாஞ்சிபுரத்தில், பொய்கைப் புஷ்கரிணியில், ஒரு ஹேமாப்ஜத்தில் த்வாபரயுகத்தில் அ௲உ௲௲உ—ஆவதான ஸித்தார்த்தி வருஷம் ஐப்பசிமாஸம் ஶுக்லபக்ஷம் அஷ்டமீ செவ்வாய்க்கிழமை கூடின திருவோண நக்ஷத்ரத்தில் அவதரித்தார்.

## பூதத்தாழ்வார் வைபவம்

துலாஶ்ரவிஷ்டாஸம்பூதம் பூதம் கல்லோலமாலிந: |
தீரே புல்லோத்பலாந் மல்லா புர்யா மீடே கதாம்ஶகம் ||

கதாம்ஶரான பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் அவதரித்த மறுநாள் அவிட்டநக்ஷத்ரத்தில், திருக்கடன்மல்லையில் மாதவிப்பூவில் அவதரித்தார்.


## பேயாழ்வார் வைபவம்

துலா ஶதபிஷக் ஜாதம் மயூரபுரி கைரவாத் |
மஹாந்தம் மஹதாக்யாதம் வந்தே ஸ்ரீநந்தகாம்ஶகம் ||

நந்தகாம்ஶரான பேயாழ்வார், பூதத்தாழ்வார் அவதரித்த மறுநாள் ஶதய நக்ஷத்ரத்தில் மாமயிலை நகரத்தில் செவ்வல்லிப் பூவில் அவதரித்தார்.

---

அவதாரஸ்தலமான திருக்கடன் மல்லையில் ஸேவை தருபவர் ←
மாதவீமுனி என்று போற்றப்படுபவர்



பூதத்தாழ்வார்



அவதார ஸ்தலமான மாமயிலையில் ஸேவைதரும்

பேயாழ்வார்


கைரவமுநி,   மஹதாஹ்வயர் என்று போற்றப்படுபவர்

# முதலாழ்வார்கள் வைபவம்

இப்படி இம்மூவரும் [1]அயோநிஜர்களாயவதரித்து, ஜ்ஞாநபக்தி வைராக்யங்களை உலகத்தார் கண்டு தெளியும்படி [2]ப்ரகாஶிப்பித்துக்கொண்டு தனித்தனியே [3]வர்த்தித்திருந்து திவ்யதேஶயாத்ரை செய்துகொண்டு திருக்கோவலூரில் ஒருராத்ரியிலே மூவரும்சேர்ந்து [4]ஓரிடைகழியில் தங்கி பரஸ்பரம் விசாரித்துக்கொண்டு [5]அதிஸந்துஷ்டர்களாயிருக்கும்போது, எம்பெருமானும் இவர்கள் சேர்த்தியைப் பார்த்து, இப்போதே கார்யங்கொள்ள வேணுமென்று நினைத்தருளி, ஒரு [6]மஹாந்தகாரத்தைமுன்னிட்டு [7]வர்ஷத்தைஉண்டாக்கித் தாமும் அவ் விடைகழியிற்சென்று இவர்களை பொறுக்க முடியாமல் நெருக்கியிட, இவர்களும் இதென்ன ஆஶ்சர்யமென்று திகைத்து, பொய்கையாழ்வார் ஸூர்யனை விளக்காக்கி ஏற்றிப்பார்க்க, பூதத்தாழ்வாரும் ஜ்ஞாநதீபத்தை ஏற்றிப்பார்க்க, பேயாழ்வாரும் பகல் விளக்காலும் இரா விளக்காலும் இருளற்றபடியால் எம்பெருமானை உள்ளபடி கண்டு புருஷஸூக்தத்தில் பூர்வாநுவாகம் போலன்றிக்கே "திருக்கண்டேன்" என்று தொடங்கி "க்ருஷ்ணாஜிநேந ஸம்வ்ருண்வந் வதூம் வக்ஷஸ்ஸ்தலாலயாம்" என்கிறபடியே களவு செய்யிலும் ஒளிக்கவொண்ணாதபடி பிரிவற்ற சேர்த்தியையுடைய பெரிய பிராட்டியாரோடு பகவத்ஸ்வரூபத்தைக் காண்பிக்க, மூவரும் அந்த பகவத்ஸ்வரூபத்தை அறிந்து அநுபவித்து, அவ்வநுபவத்தைப் பொய்கையாழ்வார் "வையந் தகளியா" என்கிற திருவந்தாதியாலும், பூதத்தாழ்வார் "அன்பே தகளியா" என்கிற இரண்டாந் திருவந்தாதியாலும், பேயாழ்வார், "திருக்கண்டேன்" என்கிற மூன்றாந் திருவந்தாதியாலும் ப்ரகாஶிப்பித்தருளி அந்தத் தேஹளீஶன் திருவடி தொழுது திவ்யதேஶயாத்ரை பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

---

1. ஸ்த்ரீகர்ப்பத்திலிருந்து தோன்றாமல் 2. வெளிப்படுத்திக் கொண்டு 3. வாசம் புரிந்து 4. ஒரு வீட்டு 'ரேழி' என்னும் முன் பகுதியில் 5. மிக்க மகிழ்ச்சியுடன் 6. பேரிருளை 7. மழையை



அவதார ஸ்தலமான திருமழிசையில் ஸேவை தரும்
திருமழிசையாழ்வார்
மழிசைப் பிரான், மஹீஸாரபுரீச்வரர், பக்திஸாரர்,
பார்க்கவர் என்று போற்றப்படுபவர்

# திருமழிசையாழ்வார் வைபவம்

மகாயாம் மகரே மாஸே சக்ராம்ஶம் பார்கவோத்பவம் |
மஹீஸாரபுராதீஶம் பக்திஸார மஹம் பஜே ||

சக்ராம்ஶரான திருமழிசைப்பிரான் முதலாழ்வார்கள் அவதரித்த வர்ஷத்தில்தைமாஸத்தில் க்ருஷ்ணபக்ஷப்ரதமை பானுவாரம் கூடின மகாநக்ஷத்ரத்தில் "உலகு மழிசையு முள்ளுணர்ந்து" என்கிற பாட்டின்படியே யிருந்துள்ள மஹீஸாரக்ஷேத்ரத்தில் ப்ருகு மஹர்ஷி [1]தபஶ்சர்யை பண்ணிக்கொண்டிருக்க, அத்தைக் கெடுக்க நினைத்த தேவேந்த்ரனாலே [2]ப்ரேரிக்கப்பட்ட ஒரு தேவஸ்த்ரீயினிடத்தில் மதிமயங்கின ப்ருகுமஹர்ஷிக்குப் புத்ரராயவதரித்தார்.

பின்பு தேவஸ்த்ரீயும் ஸ்வர்க்கத்தில் சேர, ப்ருகுவும்[3] தபஶ்சர்யாஸக்தராயிருக்க, இந்த ஶிஶுவும்[4] ரோதநம்பண்ண, எம்பெருமானும் பிராட்டியோடே வந்து குளிரக் கடாக்ஷித்தருள, அந்த ரோதநத்தைக் கேட்ட ஒரு திருவாளனென்கிற வேடன் வந்து இந்த ஶிஶுவைப் பார்த்துத் தனக்குப் பிள்ளை இல்லாமையாலே எடுத்துக்கொண்டு போய்த் தன் பத்நியான பங்கயச்செல்வியார் கையிற் கொடுக்க, அவளும்[5] வந்த்யையாயிருக்கச் செய்தேயும் முலைப்பாலுண்டாய் முலை கொடுக்க, அந்த ஶிஶுவும்[6] ஸ்தந்யாதிகளில்[7] நிராஶமாய் எல்லாரும் ஆஶ்சர்யப்படும்படி[8] அபிவ்ருத்தமாக, அத்தைப் பார்த்து, ஒரு ஶூத்ர வ்ருத்தன் தன் பத்நியோடே ஶுத்தமான பாலமுதைக் கொடுத்துக் கொண்டு அந்த [9]ஶேஷத்தைப் பத்நியும் தானும் [10]ப்ராஶநம் பண்ண, அவர்களுக்கு ஒரு புத்ரனுண்டாக, அவருக்குக் 'கணிக்ருஷ்ண' ரென்று பேரிட்டுவைக்க, அவரும் அநேக வித்யைகளை [11]அதிகரித்திருந்தார்.

இந்த ஆழ்வாரும் [12]அஷ்டமவயஸ்ஸு வந்தவாறே அந்த வேடச்சேரியைவிட்டு ஸகலஶாஸ்த்ரப்ரவீணராய்[13] பாஹ்யமதங்களி

1. தவம் 2. ஏவப்பட்ட 3. தவத்தில் ஈடுபட்டிருக்க 4. அழ 5. மலடி 6. முலைப்பாலில் 7. ஆசையற்று 8. வளர 9. மிகுதியை 10. குடிக்க 11. கற்றறிந்தார் 12. எட்டாவது 13. பிற

லும் [1]ஆந்தராளங்களிலும் ப்ரவேஶித்து அந்த ஸாரங்களையெடுத்துக் களைந்தருளி, இப்படி நானூறு ஸம்வத்ஸரம் சென்ற பின்பு "எம்பெருமான் ஶ்ரிய:பதியும் ஸர்வேஶ்வரனுமான நாராயணனே" என்று தெளிவித்துக்கொண்டு அப்படிக்கொத்த ஶ்ரிய:பதியை எழுநூறு ஸம்வத்ஸரம் த்யாநித்து ஆராதித்துக்கொண்டிருக்க, ருத்ரனும் பார்வதியோடே ஆகாஶத்தில் போகும்போது அவன் நிழல் படாமல் ஒதுங்கின இவ்வாழ்வாரைக் கண்டு கிட்டி, "உமக்கு வேண்டின வரத்தைக் கேளீர்" என்ன, ஆழ்வாரும் "இந்த ஊசியின் பின்னே நூல் போகும்படி பண்ணக்கடவாய்" என்று பரிஹஸிக்க, ருத்ரனும் [2]குபிதனாய்த் தன் நெற்றிக்கண்ணைத் திறந்து அந்த அக்நியாலே ஆழ்வாரைத் தஹிக்கப்பார்க்க, ஆழ்வாரும் தம் திருவடிகளிலே ஒரு கண்ணைத் திறந்துவிட, அந்த அக்நி ருத்ரனை தஹிக்க, ருத்ரனும் [3]பக்நனாய்ப் பார்வதியோடே ஆழ்வாரைத் திருவடிதொழுது [4]க்ஷாமணம் பண்ணிக்கொண்டு பக்திஸாரரென்கிற திருநாமத்தையும் சாத்திக் கைலாஸத்தேறப் போனான்.

பின்பு திருமழிசைப்பிரானும் ஒரு ஏகாந்த ஸ்தலத்தில் யோகஞ் செய்துகொண்டிருக்கும்போது, முதலாழ்வார்கள் மூவரும் திவ்யதேஶ ஸஞ்சாரக்ரமத்தில் அந்தத் திருமழிசைப்பிரானைக் கண்டு மகிழ்ந்து, பரஸ்பரப்ரீதர்களாய்ச் சிலநாள் அவ்விடத்திலே யோகத்திலிருந்து, பேயாழ்வார் திருவவதாரஸ்தலமான மாடமாமயிலைத் திருவல்லிக்கேணியில் எம்பெருமானைத் திருவடிதொழுது திருமழிசைப்பிரானை விட்டு, மற்றை மூவரும் திவ்யதேஶயாத்ரையாக எழுந்தருளினார்கள்.

பின்பு திருமழிசைப்பிரானும் பொய்கையாழ்வார் அவதாரஸ்தலமான பெருமாள்கோயிலில் சதுர்முகனுக்குச் சொன்னவண்ணஞ் செய்தவனான எம்பெருமானைத் திருவடிதொழுது, அவ்விடத்தில் எழுநூறு ஸம்வத்ஸரம் யோகத்திலெழுந்தருளியிருக்கும்போது, கணிக்ருஷ்ணரும் வந்து ஆஶ்ரயித்துத் திருமழிசைப்பிரானுக்குக் கைங்கர்யம் பண்ணிக்கொண்டிருக்க, அவ்விடத்தில் சொன்னவண்ணஞ் செய்த எம்பெருமான் திருவுள்ளமுகக்கும்படி [5]திருப்பிண்டி முதலான கைங்கர்யங்களைச் செய்துகொண்டிருக்கிற

---

1. தம்மைச் சேர்ந்த 2. கோபித்தவனாய் 3. தோற்றவனாய் 4. மன்னிப்புக் கேட்டு 5. மெழுகிக் கோலம் போடுதல்

ஒரு வ்ருத்தாந்யை அவர் கடாக்ஷித்து, "இப்படி நித்யகைங்கர்யம் பண்ணும்படி த்ருடமாயிருக்கக் கடவை" என்று ஒரு கவியாலே அநுக்ரஹித்தருள, அவளும் மெழுகிக் கோலம் போடும் கைங்கர்யம் பண்ணிக்கொண்டிருக்க, அத்தைப் பல்லவராயனென்கிற ராஜாவும் கேட்டுத் தனக்கும் அப்படி யௌவநம் வரும்படி ஒரு கவிபாடச் சொல்லவேணு மென்று சொல்ல, அவளும் கணிக்ருஷ்ணரை ப்ரார்த்திக்க, அவரும் "நாக்கொண்டு மானிடம் பாடேன்" என்று திருவுள்ளமாய் அது செய்வதில்லையென்ன, ராஜாவும் குபிதனாய், 'ஆகில், என் தேசத்தினின்றும் போகக் கடவீர்' என்ன, கணிக்ருஷ்ணரும் அப்படியே போவேனென்று சொல்லித் திருமழிசைப்பிரான்முன்பே தண்டன் ஸமர்ப்பித்து இச்செய்தியை விண்ணப்பஞ் செய்ய, திருமழிசைப்பிரானும் அந்த எம்பெருமானிடத்தில் அத்தை விண்ணப்பஞ்செய்து கணிக்ருஷ்ணரோடே புறப்பட்டு எழுந்தருள, சொன்னவண்ணஞ்செய்த எம்பெருமானும் ஒரு அர்ச்சகனிடத்தில் ஆவேஶித்துத் தன்னையும் கூட எழுந்தருளப்பண்ணும்படி நியமித்தருள, அவர்களும் அப்படியே எழுந்தருளப்பண்ண, அப்படியே பைந்நாகம்பாய்சுருட்டிக்கொண்டு எழுந்தருளுகிற எம்பெருமானை ஸமஸ்தமான ஜநங்களும்பின்தொடர்ந்துபோக, [1]வ்ருக்ஷாதிகளெல்லாம் உறங்கிக் கிடக்க, இந்த விபரீத[2]வ்ருத்தாந்தத்தைக்கண்டு ராஜாவும் ஓரிரவிருக்கைத்தோப்பில் எழுந்தருளுகிற கணிக்ருஷ்ணரைத் திருவடிதொழுது க்ஷாமணம் பண்ணிக்கொண்டு மீண்டு எழுந்தருள வேணுமென்று ப்ரார்த்திக்க, கணிக்ருஷ்ணரும் அப்படியே மீண்டு எழுந்தருள, ஆழ்வாரும், பெருமாளும், ஸமஸ்தஜநங்களும் முன்பு போலவே குறைவறக் கச்சிப்பெருநகரில் வாழ்ந்துகொண்டிருக்கிற நாளிலே,

திருமழிசைப்பிரானும், "யோ நர: கும்பகோணேஸ்மிந் க்ஷணார்த்தமபி திஷ்டதி | கரஸ்தம் தஸ்ய வைகுண்டம் கிமுதாந்யா விபூதய: ||" என்கிறபடியே[3]அதிஶயிதமான திருக்குடந்தை எம்பெருமானைத் திருவடிதொழத் திருவுள்ளமாய்ப் பெரும்புலியூரென்கிற க்ராமத்திலெழுந்தருளும்போது, வேதாத்யயநம் பண்ணிக்கொண்டிருக்கும் சில ப்ராஹ்மணர்கள் ஆழ்வாரை ஶூத்ரனென்று சில [4]அதிக்ஷேபங்கள்பண்ணி மற்றொருவழியாலே போகக்கடவை யென்ன, ஆழ்

1. மரம் முதலியவை 2. சங்கதியை 3. மகிமைமிக்க 4. நிந்தனைகள்


வாரும் அப்படியே எழுந்தருள, ப்ராஹ்மணர்களுக்குப் பாகவதாதிக்ஷேபத்தாலே விட்ட இடம் தெரியாமலிருக்க, பின்பு அந்த [1]க்ராமார்ச்சையான எம்பெருமான் ஆழ்வார்போகிற வீதிக்கு [2]அபிமுகனாயிருக்க, அந்த ஆஶ்சர்யத்தை நம்பியார் கண்டு[3]ஶோதித்துச் சில ப்ராஹ்மணர்களுக்குச் சொல்ல, அதிக்ஷேபம் பண்ணின ப்ராஹ்மணர்களும் அத்தைக்கேட்டு ஆழ்வாரிடத்தில் க்ஷாமணம் பண்ணிக்கொண்டிருக்க, ஆழ்வாரும் ஒரு கறுப்புநெல்லைத் தம் நகத்தினாலே கிழித்துக் காட்ட, அந்த ப்ராஹ்மணர்களும், "க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணாம் நகநிர்பிந்நம்"என்கிற வாக்கியத்தை அறிந்துகொண்டு போக, அந்த ஊரில் யாகம் பண்ணுகிற ஒரு ப்ராஹ்மணன் இந்த ஆஶ்சர்யத்தை கேட்டு யாகபலஸித்தி உண்டாகவேணுமென்று ஆழ்வாரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய் யஜ்ஞஸதஸ்ஸில் உபசரிக்க, சில துர்மதிகள் ஶூத்ரனை யஜ்ஞஸதஸ்ஸில் அழைத்தானென்று [4]பருஷோக்திகளைச் சொல்ல, தீக்ஷிதரும் உள்ளம் நொந்து நிற்க, ஆழ்வாரும் பகவத்பக்தரான தீக்ஷிதருக்கு உள்ளம் குளிரும்படிக்கும் அந்தக் [5]குமதிகளுக்கு உள்ளம் நடுங்கும்படிக்கும் திருமார்பிலே [6]ஜ்வாலாமாலியாய் ஒரு [7]திருவாழியாழ்வானைக் காண்பிக்க, அந்தக் குமதிகளும் உள் நடுங்கித் திருவடிகளிலே விழுந்துநிற்க, தீக்ஷிதரும் உள் மகிழ்ந்து, "உபஸம்ஹர விஶ்வாத்மந்" என்கிறபடியே முன்புள்ளபடி ஸேவை ஸாதித்தருள வேணுமென்று ப்ரார்த்திக்க, ஆழ்வாரும் முன்போலவே ப்ரஸந்நராய் ஶ்ரிய:பதியான நாராயணனே பரப்ரஹ்மம்' என்றும், அவனடியார்களும் [8]யதாதிகாரம் பூஜ்யர்களென்றும் அவர்களுக்குத் தெளிவித்துத் திருக்குடந்தையேற வெழுந்தருளி, ஆராவமுதனைத் திருவடி தொழுது "காவிரிக்கரைக் குடந்தையுள், கிடந்தவாறெழுந்திருந்து பேசு" என்று விண்ணப்பஞ்செய்ய, ஆராவமுதனும் அப்படியே [9]உத்யோகிக்க, 'வாழிகேசனே' என்று ஆழ்வாரும் மங்களாஶாஸநம் செய்தருள, ஆராவமுதனும் அப்படியே [10]உத்தாநஶாயியாயிருக்க, ஆழ்வாரும் அப்படியே த்யாநித்துக்கொண்டு, இரண்டாயிரத்து முந்நூறு ஸம்வத்ஸரம் யோகத்தில் எழுந்தருளியிருந்து, அவ்வநுபவத்தை நான்முகன் திருவந்தாதி திருச்சந்தவிருத்தம் இவைகளாலே ப்ரகாஶிப்பித்தருளினார்

1. கிராமத்துப் பெருமாள் 2. எதிர்முகமாக 3. குறிப்பாக 4. தீச்சொற்களை 5. துர்புத்தியுள்ளவர்களுக்கு 6 ஜ்வாலைகளை மாலைகளாக உடைய 7. சக்கரத்தாழ்வானை 8. அதிகாரத்திற்குத் தக்கபடி 9. முயற்சிக்க 10. எழுந்துசாய்ந்துள்ள திருக்கோலத்துடன்

# நம்மாழ்வார் வைபவம்

வைஶாகே து விஶாகாயாம் குருகாபுரி காரிஜம் |
பாண்ட்யதேஶே கலேராதௌ ஶடாரிம் ஸைந்யபம் பஜே ||

ஸேநேஶாம்ஶரான நம்மாழ்வார் கலியுகாதியில் - சு-ஆவது நாளான ப்ரமாதிவர்ஷத்தில் வையாசி பூர்ணிமை வெள்ளிக்கிழமை கூடின விஶாகாநக்ஷத்ரத்தில் திருக்குருகையில் ஸச்சூத்ரர்களும் பகவத் பக்தர்களுமான காரி உடையநங்கையார்களுக்குப் புத்ரராக



அவதார ஸ்தலமான ஆழ்வார் திருநகரியில் ஸேவைதரும்

**நம்மாழ்வார்**

மாறன், சடகோபன், குருகையர்கோன், வகுளாபரணன்,
பராங்குசன் என்று போற்றப்படுபவர்

அவதரித்து [1]ப்ராக்ருதசிசுக்கள் போலே முலையுண்ணாதே [2]அபிவ்ருத்தராயிருக்க, அந்த ஆச்சர்யத்தைக் காரியாரும் உடையநங்கையாரும் கண்டு மகிழ்ந்து பத்துநாளுங்கடந்த இரண்டாநாள் 'மாறன்' என்று திருநாமம் சாத்திப் பொலிந்துநின்றபிரான் முன்பாக ஸேவிக்கப்பண்ணுவித்து ச்ரேஷ்டமான திருப்புளியாழ்வாரடியிலே தொட்டிலிட்டு வைத்திருக்க, ஆழ்வாரும் பதினாறு[3] திருநக்ஷத்ரம் இவ்வுலகத்தாருக்கு ஊமைபோலவும் குருடன் போலவும் இருக்க, அப்போது ஸ்ரிய:பதியான எம்பெருமானை [4]ஸர்வலோக ஜநநியான பெரிய பிராட்டியாரும் 'நம்முடைய ப்ரஜைகளுக்கு உய்யும் உபாயத்தை உபதேசித்தருளவேணும்' என்று கேட்க, எம்பெருமானும் 'அப்படியே உபதேசித்தருளக்கடவோம்' என்ன, பின்பு இருவரும் ஸேநைமுதலியாரைப் பார்த்து, "பூலோகத்தில் உம்முடைய அம்சரான நம்மாழ்வாருக்கு ஸகலரஹஸ்யங்களையும் உபதேசித்துவாரும்" என்று அருளிச் செய்ய, ஸேநைமுதலியாரும் அப்படியே பூலோகத்தில் வந்து,

"விஷ்வக்ஸேநஸ்ய மாகத்ய ப்ரீத்யா ஸ்ரீநகரீம் சுபாம் |
சடகோபாய முநயே திந்த்ரிணீ மூலவாஸிநே |
தாபாதி பூர்வகம் மந்த்ரம் த்வயம் ச்லோகாதிகம் க்ரமாத் ||"

என்கிறபடியே திருப்புளியாழ்வாரடியிலே இருக்கிற நம்மாழ்வாருக்கு பிறர் கண்படாமல் திருவிலச்சினை முதலாக ரஹஸ்யாதிகளையும் [5]ப்ரஸாதித்தருள, நம்மாழ்வாரும் [6]ஸங்கசக்ராங்கிதராயும் அதிதேஜிஷ்டராயும் இருக்க, அந்த ஆச்சர்யத்தைத் [7]தந்யர்களான காரியாரும் உடைய நங்கையாரும் கண்டு இவர் ப்ராக்ருதசிசுபோலன்றிக்கே சட வாயுவை நிராகரித்தவரென்றும், ஆகையால் சடகோபரென்றும் உள் மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

———

1. சாதாரணகுழந்தைகள் 2. வளர்ந்திருக்க 3. வயதுவரை 4. லோகமாதா 5. போதித்தருள 6. ஸமாஸ்ரயணம் செய்து கொண்டவராயும் 7. பாக்யசாலிகளான.

# மதுரகவியாழ்வார் வைபவம்

சைத்ரே சித்ராஸமுத்பூதம் பாண்ட்யதேசே கணாம்சகம் |
ஸ்ரீபராங்குச ஸத்பக்தம் மதுரம் கவிமாச்ரயே ||


குமுதாம்சரான மதுரகவியாழ்வார் த்வாபரயுகத்தில் ௮௯௩௮௭௯-ஆவதான ஈச்வரவர்ஷத்தில் சித்திரைமாஸத்தில் சுக்லசதுர்தசி வெள்ளிக்கிழமை கூடின சித்ராநக்ஷத்திரத்தில் திருக்கோளூரில் ஒரு [1]பூர்வசிகாப்ராஹ்மணருக்குப் புத்ரராயவதரித்து[2]ஸ்வசாகையான ஸாமசாகை முதலாக ஸகல வேதவேதாங்கங்களையும் அதிகரித்துத் திவ்யதேசயாத்ரை சிரகாலமாகப் பண்ணிக்கொண்டு திருஅயோத்யையில் இருக்கும்போது ஒரு ராத்ரியில் திருக்கோளூர் எம்பெருமானை அத்திசையுற்று நோக்கும்போது [3]ஒரு மஹாதேஜஸ்ஸைக் கண்டு, இது என்னவென்று திகைத்து, அத்தை [4]சோதிக்கத் திருவுள்ளமாய்த் தேஜஸ்ஸைக்கண்ட குறிப்புக்கொண்டு திருநகரியேற எழுந்தருளி, அதுவும் தென்புறத்தில் போக, அப்போது அந்தத் தேஜஸ்ஸை வடதிசையிற்கண்டு, திருநகரியில் வந்து சோதிக்க, திருப்புளியாழ்வாரடியிலே நம்மாழ்வாரையுங் கண்டு, ஆஜாநமாயிருந்த திவ்யசரித்திரத்தையுங்கேட்டு, இப்படி[5]ப்ராக்ருத ஸம்பந்தம் அற்றிருக்கிற நம்மாழ்வார்விஷயத்தில் மதுரகவியாழ்வாரும் பேரப்ரதிபத்திபண்ணி, "சிறியதின் வயிற்றிலே பெரியது பிறந்தால் எத்தைத்தின்று எங்கே கிடக்கும்?" என்று விண்ணப்பஞ் செய்ய, நம்மாழ்வாரும் "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று அருளிச்செய்து திருக்கண்களை [6]அமலங்களாக விழித்துக் கடாக்ஷித்தருள, மதுரகவிகளும் பேரவுள் மகிழ்ந்து, இப்படி அப்ராக்ருதமான திவ்யசரித்ரங்களையுடைய தேவரீர் அடியேனுக்குத் தத்வஹித புருஷார்த்தங்களை ப்ரகாசிப்பிக்கிற விசேஷார்த்தங்களையெல்லாம் ப்ரஸாதித்தருளவேணும் என்று ப்ரார்த்திக்க,

அப்போது ஸ்ரீவைகுண்டமென்கிற கலங்காப் பெருநகரில் வாழ்ந்துகொண்டிருக்கிற ஸ்ரீமந்நாராயணன் தேவீ பூஷண ஆயுத பரிஜநங்களோடே பெரியதிருவடிமேலே ஏறியருளி நம்மாழ்வார் முன்பே ஸேவை ஸாதித்தருள நம்மாழ்வாரும் திவ்யாத்மஸ்வரூப

---

1. முன்குடுமி 2. தமது சாகை 3. ஒரு பேரொளியை 4. ஆராய்ந்தருள 5. உலகப்பற்று 6. நிர்மலமாக

திவ்யமங்களவிக்ரஹதிவ்யதேவிபூஷணாயுத திவ்யகுண சேஷ்டிதங் களையும் அநுபவித்து, அவ்வநுபவத்தை ப்ரகாஶிப்பிக்கிற ஸர்வ வேதாந்த ஸாரமான திருமந்த்ரார்த்தத்தை நாலு ப்ரபந்தங்களாலே ப்ரகாஶிப்பித்தருளத் திருவுள்ளமாய், அது தன்னிலும் ருக்வேத




அவதார ஸ்தலமான திருக்கோளூரில் ஸேவைதரும்
**மதுரகவியாழ்வார்**
இன்கவியார், ஆழ்வார்க்கடியான் என்று போற்றப்படுபவர்.

ஸாரமான திருவிருத்தத்தையும், யஜுர்வேதஸாரமான திருவாசிரியத்தையும், அதர்வவேதஸாரமான பெரிய திருவந்தாதியையும், ஸாமவேதஸாரமான திருவாய்மொழியையும் அருளிச் செய்து, அவைகளை மதுரகவிகளுக்கு ஸார்த்தமாக ஸ்திரப்ரதிஷ்டிதமாகும்படி ப்ரஸாதித்தருள,

மதுரகவிகளும் அவைகளைப் பெற்று, மிக்க வேதியர் வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி யென்னெஞ்சுள் நிறுத்தின நம்மாழ்வாரைக்காட்டிலும் தேவுமற்றறியாதவராய், 'திருக்கண்டேன்' என்று நிருபிக்கப்பட்ட ஸ்ரிய:பதி "நான்முகனைப் படைத்த நாராயணனே" என்று அறிந்து, இமையோர் தலைவா! மெய்ந்நின்று கேட்டருளாய், "உன்னையல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்" என்றருளிச்செய்த அர்த்தத்தை "என்னப்பனில், நண்ணித் தென்குருகூர்நம்பி யென்னக்கால், அண்ணிக்குமமுதூறும்" என்று [2]பாகவதசேஷத்வபர்யந்தமாகக்காட்டத் திருவுள்ளமாய், ஆழ்வார் தம்மிடத்தில் பண்ணின கடாக்ஷவிசேஷத்தைக் கண்ணிநுண்சிறுத்தாம்பாலே ப்ரகாசிப்பித்தருளி நிற்க, பொலிந்துநின்றபிரானாலே ப்ரஸாதிக்கப்பட்ட மகிழம்பூமாலையைச் சாத்திக்கொண்டு, வகுளாபரணனென்கிற திருநாமத்தையுடையவராய், ஸ்வப்ரபந்தங்களாலே பரமதங்களுடைய [3]மதத்தை அழித்தவராகையாலே பராங்குசர் என்கிற திருநாமத்தையுடையவரான நம்மாழ்வார் திருவாய்மொழியருளிச்செய்யும்போது "எத்திறம்" என்று கண்ணன் ஸௌலப்யத்தில் மோஹித்தாற்போலே ஆசார்யபக்தி தலையெடுத்து ஆத்மகுணபூர்ணரான மதுரகவிகள் பக்கல் ஈடுபட்டு விசேஷகடாக்ஷம் செய்தருள, மதுரகவிகளும் ஆழ்வார் அவாவற்று வீடுபெற்ற பின்பு திருநகரியிலே நம்மாழ்வாரை [4]அர்ச்சாரூபமாகத் திருப்ரதிஷ்டை செய்து ஆராதித்துக் கொண்டு நம்மாழ்வார் [5]ப்ரபந்தசதுஷ்டயத்தையும் ப்ரவர்த்திப்பித்தருளினார்.

1. அர்த்தத்துடன் உள்ளத்தில் நிலைபெற்றிருக்கும்படி 2. பாகவதர்களுக்கு அடிமையாதல்வரை 3. செருக்கை 4. விக்ரஹ ரூபத்தில் 5. நான்கு பிரபந்தங்களையும்.



அவதார ஸ்தலமான திருவஞ்சிக்களத்தில் ஸேவைதரும்

குலசேகராழ்வார்

கொல்லிகாவலன், கூடல் நாயகன், கோழிக்கோன், சேரலர்கோன், வில்லவர்கோன் என்று போற்றப்படுபவர்

# திருமங்கையாழ்வார் வைபவம்

கும்பே புநர்வஸூஜாதம் கேரளே கோளபட்டணே |
கௌஸ்துபாம்ஸம் தராதீஸம் குலஸேகரமாஸ்ரயே ||

கௌஸ்துபாம்ஸரான குலஸேகராழ்வார் கலியுகத்தில்-உஅ- ஆவதான பராபவவர்ஷத்தில் மாசிமாஸத்தில் ஸுக்லத்வாதஸி வெள்ளிக்கிழமை கூடின புநர்வஸூநக்ஷத்திரத்தில் வஞ்சிக்களம் என்னும் கொல்லிநகரில் த்ருடவ்ரதரென்கிற ராஜாவுக்குப் புத்ரராய் அவதரித்து [1]ஸாஸ்த்ராப்யாஸம் முதலாக தநுர்வேதாதிகளையும் அதிகரித்து "மாற்றலரை வீரங்கெடுத்த செங்கோல் கொல்லிக்காவலன்" என்னும்படி [2]ப்ரதிபக்ஷங்களையெல்லாம் ஜயித்து ஸாதுஜநங்களை ரக்ஷித்துக்கொண்டு பகவத்பக்தி மேலிட்டு, "உன்னிற்று மற்றொரு தெய்வம் தொழா ளவனையல்லால்" என்றும், "தண்சேறையெம்பெருமான் தாள்தொழுவார் காண்மினென் தலைமேலாரே" என்றும், "ஓதிலும் உன்பேரன்றி மற்றோதாள்" என்றுஞ் சொல்லுகிறபடியே பாகவதபர்யந்தமாக பகவதாராதநத்தைத் தலைக் கட்டிக் கொண்டு கோதற்றஸ்ரீவைஷ்ணவர்களோடே ஸ்ரீமத்ராமாயண பாகவதாதிகளையும் திவ்யதேஸமாஹாத்ம்யங்களையும் காலக்ஷேபம் பண்ணிக் கொண்டிருக்க,

அப்போதொரு நாள், ஸ்ரீமத்ராமாயணத்தில் சக்ரவர்த்தித் திருமகனிடத்தில் ருஷிகள்வந்து ஸரணாகதிபண்ண, அவனும் அதைத் திருவுள்ளம்பற்றி,

அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம் |
நஹி ப்ரதிஜ்ஞாம் ஸம்ஸ்ருத்ய ப்ராஹ்மணேப்யோவிஸேஷத: ||

என்றருளிச்செய்த பெருமையும் கேட்டு பரம பக்தி தலையெடுத்து அந்தக் கதையை அப்போதுள்ள நடத்தையாக நிஸ்சயித்து,

"சதுர்தஸ ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீமகர்மணாம் |
ஏகஸ்ச ராமோ தர்மாத்மா கதம் யுத்தம் பவிஷ்யதி ||"

என்கிற ஸ்லோகார்த்தத்தைக் கேட்டு, உள்ளங்கலங்கி உருவார் சக்கரம் சங்கு சுமந்திங்கும் மோடொருபா டுழல்வானோ ரடியான்

1. சாஸ்திரப் பயிற்சி 2. பகைவர்களை

நிற்க, இப்படியாவதே?' என்று [1]ஸம்ப்ரமத்துடன் தமக்குள் பெரும்படையைக் கூட்டிக்கொண்டு [2]ஸஹாயார்த்தமாகப் புறப்பட, அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் இவருடைய பரமபக்தியிலீடுபட்டு,

"தம் த்ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம் |
பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்தாரம் பரிஷஸ்வஜே ||"

என்கிற ஶ்லோகார்த்தத்தை அவர் செவிப்படும்படி அருளிச்செய்ய, குலஶேகராழ்வாரும் அத்தைக்கேட்டு ஸந்துஷ்டராய் மீண்டு எழுந்தருள, மந்த்ரிகளும் ஸ்ரீவைஷ்ணவர்களிடம் அஸூயையாலே [3]க்ருஹார்ச்சையினுடைய திருவாபரணத்தை ஒளித்துவைத்து ஸ்ரீவைஷ்ணவர்களிடத்தில் பழிசொல்ல, குலஶேகராழ்வாரும் "ஆரங்கெடப் பரனன்பர்கொள்ளார்" என்கிறபடியே, 'ஸ்ரீவைஷ்ணவர்கள் எடுக்கவில்லை' என்று பாம்புக்குடத்தில் தான் கைவைக்க, மந்த்ரிகளும் உள்நடுங்கி அத்திருவாபரணத்தையும் கொடுத்து [4]க்ஷாமணம் பண்ணிக் கொண்டார்கள்.

பின்பு ஆழ்வாரும் [5]ராஜ்யதந்த்ரத்தில்தன் குமாரருக்குப் பட்டாபிஷேகம் பண்ணிவைத்து, அந்த ஸ்ரீவைஷ்ணவர்களோடே யாவரும் வந்தடிவணங்குமரங்கநகர் துயின்றவனைத் திருவடிதொழுது, பகவத்குணங்களை அநுபவித்து, அவ்வநுபவத்தை ஸம்ஸ்க்ருதமான முகுந்தமாலையாலும் செந்தமிழான பெருமாள் திருமொழியாலும் [6]ப்ரகாஶிப்பித்தருளி, [7]பகவத்ப்ரதிபத்தி பாகவதப்ரதிபத்தி பர்யந்தமாகவே இருக்குமென்று அறிவிப்பித்தருளினார்.

---

1. பரபரப்புடன் 2. உதவிபுரிவதற்காக 3. அகத்தில் ஆராதிக்கும் பெருமாளுடைய 4. மன்னிப்புக் கேட்டார்கள் 5. அரச பதவியில் 6. வெளியிட்டருளி 7. பகவானிடம் பக்தி